[1970 மார்ச் 26]

திரு. என். துரைபாண்டியன் : கன்யாகுமரி, ராமேசுவரம் ஆகிய இரண்டு இடங்களும் புண்ணியஸ்தலங்களாக இருப்பதினால், அவை இதே ரோடில் இருப்பதனால், கன்யாகுமரிக்கும் ராமேசுவரத்திற்கும் இரண்டு துரித பஸ்கள் விடுவதாக கடந்த அரசு முடிவு செய்திருந்தது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அப்படிச் செய்தால் தூத்துக்குடி, நாகர்கோவில் கனெக்ட் ஆகும். ஆகவே, இதை துரிதப் படுத்தி செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கடந்த அரசு புண்ணியஸ்தலங்களுக்கு பஸ்கள் விடுவதாக முடிவெடுத்தது பற்றிய செயற்குறிப்பு என்னிடம் இல்லை. தற்பொழுது அது போன்ற ஒரு செயற்குறிப்பும் இல்லை.

திரு. மு. ச. சிவசாமி : கன்னியாகுமரி, ராமேசுவரத்திற்கு போவதாக இருந்தால் தற்பொழுதுள்ள பஸ் ரூட் வழி 280 மைல். கோஸ்டல் ரோடு வழியாகப் போனால் தூரம் 140 மைல். கோஸ்டல் ரோடு வழி யாகப் போனால் 140 மைல் தூரம் குறைவாக இருக்குமாதலாலும், மக்கள் குறைந்த கட்டணத்தில் போவதற்கு வசதியாக இருக்குமாத லாலும், இனிமேலாவது கோஸ்டல் ரோடு வழியாக கன்னியாகுமரி, ராமேசுவரத்திற்கு துரித பஸ்களை விடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க புனராலோசனை செய்யுமா இந்த அரசு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பி னர் சொன்னபடி மறுபரிசீலனை செய்யலாம்.

அரசுப் போக்குவரத்துப் பணிக் களரிகளில் பெட்ரோல் நிலையங்கள்

* **564 வினா.—திரு. கே. சகாதேவ கண்டர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுப் போக்குவரத்துத் துறை, (i) சென்னை மாநகரிலும் (ii) மாவட்டங்களிலும் உள்ள தனது பணிக் களரிகளில் இந்திய எண்ணெய் நிறுவனத்தின் உடனுழைப்புடன் பெட்ரோல் நிலையங்களை அமைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (i) ஆம்.

(ii) இல்லை.

திரு. கே. சகாதேவக் கண்டர் : இந்த பெட்ரோல் நிலையங்கள் அமைப்பதற்காக சர்க்கார் எவ்வளவு முதலீடு செய்திருக்கிறது? அதி லிருந்து சர்க்காருக்கு எவ்வளவு லாபம் கிடைத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா : லாப நஷ்ட கணக்கே கிடையாது

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, ஸ்டேட் டிரான்ஸ் போர்ட் வொர்க்ஷாப், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்கள் நிற்கும் இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள இண்டியன் ஆயில் பங்குகளை மாலை நேரம் ஆகிவிட்டால் மூடிவிடுகிறார்கள். ஆகையினால் அரசாங்கத்திற்குச் சொந்தமான பல வண்டிகள் வெளியார் பங்குகளுக்குப் போய் பெட்ரோல், டீசல் பிடிக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதைத் தவிர்ப்பதற்கு அந்த பங்குகளெல்லாம் 24 மணி நேரம் வேலை செய்யக்கூடிய அளவுக்கு ஆட்களைப் போட்டு அந்த பங்குகளை நடத்துவ தற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனியார் பங்குகளில் மாலை வேலைகளில் டீசல், பெட்ரோல் பிடிப்பதற்கான ஏற்பாடு இருப்பதாக செயற்குறிப்பு இல்லை. அப்படிக் குறைபாடு இருக்கு மானால், அதை அரசு கவனித்து நடவடிக்கை எடுக்கும்.

Thiru K. VINAYAKAM : Whereas the Madras State Transport is a very consumer of petrol and liesel oil and whereas the commission on the purchase of these would go to the coffers of the Government, will the Government think in terms of maintaining their own petrol buwnk in all workshops where the buses stay during nights?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றி செயற் குறிப்பு இப்பொழுது இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதுபோல அரசாங்கப் போக்குவரத்துத் துறை இது போன்ற பெட்ரோல் பங்குகளை, பெட்ரோல், டீசல் ஸ்டேஷன்களை ஆரம்பிக்கலாம் என்பது விவாதத்திற்குரிய ஒரு பிரச்னே.

அரசுப் பேருந்து விபத்துக்கள்

*565 வினு.—திரு. ஆர். கருப்பையா : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

கடந்த 1969-ம் ஆண்டு டிசம்பரில் மட்டும் அரசினர் பேருந்துகள் எத்தனை இடங்களில் விபத்துகளுக்கு உள்ளாயின?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நூற்று முப்பத்து ஒன்று இடங்களில்.

*566 வினு.—திரு. ஆர். கருப்பையா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னையில் 1969-ம் ஆண்டு, அக்டோபர் 6-ந் தேதி, இரண்டு அரசாங்க பஸ்கள் மோதிக்கொண்டது உண்மையா?

(இ) இதனுல் எத்தனை பேர் படுகாயமுற்றனர்?

(உ) இந்த விபத்திற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ஒரு விபத்தில் 21 பேர்களும் மற்றொரு விபத்தில் 19 பேர்களும் காயமுற்றனர்.

(உ) பேருந்து ஓட்டுநர்களின் கவனக்குறைவினுல் விபத்துக்கள் நேர்ந்தன.

முற்பகல் 9-30 **திரு. கொ. இர. ஞானசம்மந்தன் :** தலைவர் அவர்களே, இப் பொழுது மெயின்டினன்ஸ் சரியாக இல்லாததால், இப்படிப்பட்ட ஆக்ஸிடெண்ட்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பராமரிப்புச் சரியாக இல்லாததால் விபத்துக்கள் ஏற்படுவதாகச் சொல்ல முடியாது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இம்மாதிரி விபத்துக் கள் ஏற்பட்டால், பஸ்களுடைய ஓட்டுநர்கள், ட்ரைவர்கள், அல்லது சம்பந்தப்பட்ட அலுவலர்கள்மீது போலீசார் நடவடிக்கை எடுத்தபோது, கோர்ட்டில் வழக்கு பதிவு செய்தால், அப்படிப்பட்ட ட்ரைவர்களுக்கு வாரண்டு சர்வ் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது என்பது வாஸ்த வமா? அடிக்கடி ட்ரைவர்களை மாற்றுவதால், அதைப் பற்றிய விவ ரங்கள் தெரியாததால், வாரண்ட் ஒரு ஆண்டுகாலமாகியும் சர்வ்